**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 31.03.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 31.03.2020 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

( 1 ) மாண்புமிகு தமிழக முதல்வர் 05.03.2020 அன்று நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவிற்கு இராசிபுரம் நகரம் வழியாக செல்ல உள்ளார்கள். அவர் செல்லவுள்ள சி.பி. கன்னையா தெரு சாலையிலுள்ள கழிவுநீர் கால்வாய் சாலையைவிட குறைவாக உள்ளதால், அதனை உயர்த்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் ஆகியோர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தயாரிக்கப்பட்ட ரூ. 960000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 960000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

(902/20/இ1)

**தீர்மானம் எண். 763**

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இராசிபுரம் நகராட்சிப் பள்ளிகளில் குழந்தைகளின் கற்றலை எளிமையாக்கவும் கல்வித் திறனை மேம்படுத்தவும் வேண்டி கீழ்க்கண்டுள்ளவாறு பள்ளிகளில் Smart Class உள்ளிட்ட வசதிகள் மேற்க்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | ரங்கப்பன் தெரு துவக்கப் பள்ளி மற்றும் காட்டூர் நடுநிலைப் பள்ளியில் Smart Class, Smart TV, மாணவர் செராமிக் பலகைகள், ஆசிரியர் பலகைகள் அமைத்தல் | ரூ. 980,000/– |
| 2) | பாச்சி தெரு மற்றும் சுப்பராய தெரு துவக்கப் பள்ளிகளில் Smart Class, Smart TV, மாணவர் செராமிக் பலகைகள், ஆசிரியர் பலகைகள் அமைத்தல் | ரூ. 980,000/– |
| 3) | காட்டூர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் செராமிக் பலகைகள், மாணவர் பலகைகள் மற்றும் தானியங்கி பணியமைப்பு அமைத்தல் | ரூ. 970,000/– |
| 4) | அண்ணாசாலை துவக்கப் பள்ளி மற்றும் பாரதிதாசன் சாலை நடுநிலைப் பள்ளியில் Smart வகுப்பறை மற்றும் ஆறு நகராட்சி பள்ளிகளுக்கும் கணினி பிரிண்டர் அமைத்தல் | ரூ. 990,000/– |

மேற்காணும் நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் மேம்பாட்டு நலன் கருதி பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிகளுக்கான

செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் கற்றல் மேம்பாட்டு திறனை வளர்ப்பதற்காக தேவையான பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
இ) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம்.

(415/20/இ1)

**தீர்மானம் எண். 764**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் 10.03.2020 அன்று கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | வார்டு எண். 6, 9, 12, 18, 19 மற்றும் 21–இல் உப்பு நீர் குழாய் அமைத்து தருதல். | ரூ. 2.50 இலட்சம் | 1) என். செல்லப்பன், இராசிபுரம் | 0.16% | – |
| | | | 2) ஜெ. ரவிச்சந்திரன், இராசிபுரம் | – | 2.10% |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.16% குறைவாக உள்ளதால் அவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(396/20/இ2)

**தீர்மானம் எண். 765**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவு கணினி மற்றும் கணினி உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு (AMC) மேற்க்கொள்ளும் ரூ. 180000/– மதிப்பீட்டுப் பணிக்கு 11.03.2020–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Spyder Technology, Salem - மதிப்பீட்டைவிட 0.62% குறைவு
2) Digi Print Services, Salem - மதிப்பீட்டைவிட 0.26% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.62% குறைவான Spyder Technology நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.62% குறைவான M/s. Spyder Technology, சேலம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(452/20/இ1)

**தீர்மானம் எண். 766**

அனுமதிக்கப்பட்டது.

(5) தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகளின் மலரில் தமிழ்முரசு நாளேட்டில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான தொகை ரூ. 6300/– வழங்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் வரவேற்பு மலரில் விளம்பரம் தினத்தந்தி நாளேட்டில் வெளியிடப்பட்டதற்கான தொகை ரூ. 18144/– வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (497/20/இ1)

**தீர்மானம் எண். 767**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி அனைத்துப் பிரிவுகளிலும் கணினியில் தரவேற்றம் செய்யப்படும் கோப்புகள் Backup எடுத்து பாதுகாப்பாக வைக்க நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனியே 1 TB Hard Drive வாங்க பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Raj Computer, Salem - Rs. 20000/-
2) Spyder Technology, Salem - Rs. 19200/-
3) Venus Tech., Salem - Rs. 19600/-

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள M/s. Spyder Technology, Salem விலைப்புள்ளியினை ஏற்கவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(819/20/இ1)

**தீர்மானம் எண். 768**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய SKS ஆட்டோ மொபைல்ஸ், நாமக்கல்–இல் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய ஆகும் செலவினத்தை ரூ. 46000/–ஐ குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) ஆணையாளரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(744/20/இ2)

**தீர்மானம் எண். 769**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டிலுள்ள பழுதடைந்த Samsung Printer–க்குப் பதிலாக புதியதாக HP 1005 multifunction பிரிண்டர் வழங்க பெறப்பட்ட விலைப்புள்ளிகள் வருமாறு.

1) Venus Tech., Salem - Rs. 20500/-
2) Raj Computer, Salem - Rs. 20000/-
3) Spyder Technology, Salem - Rs. 19850/-

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s. Spyder Technology, Salem விலைப்புள்ளியினை ஏற்கவும், செலவினத்தை நகராட்சி வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(818/20/இ1)**

**தீர்மானம் எண். 770**

அனுமதிக்கப்பட்டது.

(9) இந்நகராட்சியில் குழாய் திறப்பாளராக பணிபுரிந்து 31.03.2020 அன்று வயது முதிர்வின் காரணமாக திரு பெ. இராஜமாணிக்கம் என்பவர் ஓய்வுபெற உள்ளதால் சிறப்பு சேமநலநிதி நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2116/19/சி1)**

**தீர்மானம் எண். 771**

அனுமதிக்கப்பட்டது.

(10) நாமக்கல் மாவட்ட முதன்மை கோர்ட்டில் திருமதி மாதேஸ்வரி, க/பெ. முத்து என்பவர் OS.No. 102/2013 ஆக தொடரப்பட்ட வழக்கின் மேல் முறையீடு வழக்கு எண். A.S.No. 86/2019–இல் தொடரப்பட்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக வாதாட வக்காலத்து வழங்கப்பட்ட திரு எம். ரவி, M.A., M.L., Government Pleader அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 7000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ. 7000/– வழங்க பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(772/20/எப்1)**

**தீர்மானம் எண். 772**

அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சி ரங்கப்பன் தெரு துவக்கப் பள்ளி மற்றும் காட்டூர் நடுநிலைப் பள்ளியில் செராமிக் பச்சை வண்ண பலகைகள், மாணவர் பலகைகள், தானியங்கி மணி அமைப்பு Smart Class மற்றும் Smart TV அமைத்தல் பணிகள் செய்ய ரூ. 980000/– மதிப்பீட்டு

கல்வி நிதிப் பணிக்கு 27.03.2020—இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Treasure Envision, 49, KSP Nagar, Anaiyur, Madurai. – மதிப்பீட்டைவிட 0.06 % குறைவு.

2) M/s. JMD Solution, 205/3, Bagathsingh st., Madurai – மதிப்பீட்டைவிட 0.53 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.06 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மதிப்பீட்டைவிட 0.06 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/415/19)**

**தீர்மானம் எண். 773**

அனுமதிக்கப்பட்டது.

(12) இராசிபுரம் நகராட்சி பாச்சி தெரு மற்றும் சுப்பராய தெரு துவக்கப் பள்ளியில் செராமிக் பச்சை வண்ண பலகைகள், மாணவர் பலகைகள், தானியங்கி மணி Smart Class Smart TV அமைத்தல் பணிகள் செய்ய ரூ. 980000/— மதிப்பீட்டு கல்வி நிதிப் பணிக்கு 27.03.2020—இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Treasure Envision, 49, KSP Nagar, Anaiyur, Madurai. – மதிப்பீட்டைவிட 0.06 % குறைவு.

2) M/s. JMD Solution, 205/3, Bagathsingh st., Madurai – மதிப்பீட்டைவிட 0.60 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.06 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மதிப்பீட்டைவிட 0.06 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/415/2020)**

**தீர்மானம் எண். 774**

அனுமதிக்கப்பட்டது.

(13) இராசிபுரம் நகராட்சி காட்டூர் நடுநிலைப் பள்ளியில் செராமிக் பச்சை வண்ண பலகைகள், மாணவர் பலகைகள், தானியங்கி மணி அமைப்பு அமைத்தல் பணிகள் செய்ய ரூ. 970000/— மதிப்பீட்டு கல்வி நிதிப் பணிக்கு 28.12.2019—இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Treasure Envision, 49, KSP Nagar, Anaiyur, Madurai. – மதிப்பீட்டைவிட 0.05 % குறைவு.

2) M/s. JMD Solution, 205/3, Bagathsingh st., Madurai – மதிப்பீட்டைவிட 1.22 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.05 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.05 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/415 /2020)

**தீர்மானம் எண். 775**

அனுமதிக்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சி அண்ணாசாலை தொடக்கப் பள்ளி மற்றும் பாரதிதாசன் சாரை நடுநிலைப் பள்ளியில் Smart Class மற்றும் ஆறு பள்ளிகளிலும் கனிணி பிரின்டர் அமைத்தல் பணிகள் செய்ய ரூ. 990000/– மதிப்பீட்டு கல்வி நிதிப் பணிக்கு 28.12.2019–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. Treasure Envision, 49, KSP Nagar, Anaiyur, Madurai. – மதிப்பீட்டைவிட 0.07 % குறைவு.
2) M/s. JMD Solution, 205/3, Bagathsingh st., Madurai – மதிப்பீட்டைவிட 1.41 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.07 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.07 % குறைவான M/s. Treasure Envision ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/415 /2020)

**தீர்மானம் எண். 776**

அனுமதிக்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சி சி. பி. கன்னையா தெரு கால்வாய் சுவர் உயர்த்தி அமைத்தல் பணி மேற்க்கொள்ள ரூ.960000/– மதிப்பீட்டு பணிக்கு 27.03.2020–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், ஆர். பட்டணம் அஞ்சல், இராசிபுரம். – மதிப்பீட்டைவிட 0.02 % குறைவு.
2) திரு ஆர். எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.32% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.02 % குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.02 % குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/ 902/2020)

**தீர்மானம் எண். 777**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சியில் இணையதளத்தில் தயார் செய்யப்பட்ட 2018–2019–ஆம் ஆண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்விநிதி கணக்குகளை தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்து, தணிக்கை முடிக்கப்பட்டுள்ளதால், ஆண்டு கணக்குகள் தயார் செய்து வழங்கியதற்கான தொகை `. 45000/– அக்கவுண்ட்ஸ் கன்சல்டென்ட் திரு ஜெ. கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 2018–2019–ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் தயார் செய்ததற்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(பி2/903/20)

**தீர்மானம் எண். 778**

அனுமதிக்கப்பட்டது.

( 17 ) இராசிபுரம் நகரில் நாவல் கொரோனா வைரஸ் (கோவிட்–19) என்ற நோயினை பரவாமல் தடுக்க கீழ்க்காணும் கிருமிநாசினிகள் மற்றும் இதரப் பொருட்களை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.40 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**கிருமிநாசினிகள் மற்றும் இதரப் பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) | லைசால் (Lysol) | – | 800 லிட்டர் |
| 2) | பிளிச்சிங் பவுடர் | – | 2 மெ. டன் |
| 3) | முக கவசம் | – | 3000 |
| 4) | சோப்பு ஆயில் | – | 20 லிட்டர் |
| 5) | கையில் தேய்க்கும் மருந்து (Sanitizer) | – | 6 லிட்டர் |
| 6) | முழு கவச கோட்டு | – | 10 |
| 7) | 20 லிட்டர் பிளாஸ்டிக் பக்கெட் | – | 20 |
| 8) | ஒரு லிட்டர் பிளாஸ்டிக் மக்கு | – | 20 |
| 9) | 1% sodium Hypo chloride | – | 1000 |
| 10) | கை கழுவும் சோப் | – | 200 |
| 11) | கையுறை (Gloves) | – | 1000 |
| 12) | லைசால் தெளிக்கும் இயந்திரம் (mist blower) | – | 2 |
| 13) | ID Card அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | – | 270 |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட கிருமிநாசினிகள் மற்றும் இதரப் பொருட்களை வாங்க ஆகும் செலவினத்திற்கு ரூ. 3.50 இலட்சத்திற்கு தமிழக அரசு (COVID-2019) நிதி வழங்கியுள்ளது. மீதமுள்ள ரூ. 0.90 இலட்சத்தினை SUC நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) Section 15–இல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/868/20)

**தீர்மானம் எண். 779**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.07.2007 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2 நாள் 21.09.2009–இன்படி புதியதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்புக் கட்டணம் முந்தைய ஆண்டின் தொகையிலிருந்து 5% உயர்த்தி வசூல் செய்யப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கும்போது சாலை பராமரிப்பு கட்டணம் கீழ்கண்டவாறு 5% சதவீதம் 01.04.2020 முதல் உயர்வு செய்து வசூல் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | சாலை விவரம் | 1.4.2019 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் ரூ. | 1.4.2020 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | **கருங்கல் ஜல்லி சாலை**<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>030.090 மீட்டர் நீளத்திற்கு | 1717/–<br>2783/– | 1803/–<br>2922/– |
| 2 | **தார் சாலை**<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>030.090 மீட்டர் நீளத்திற்கு | 3675/–<br>4654/– | 3859/–<br>4890/– |
| 3 | **சிமெண்ட் சாலை**<br>0.30 மீட்டர் நீளத்திற்கு<br>030.090 மீட்டர் நீளத்திற்கு | 4242/–<br>5229/– | 4454/–<br>5490/– |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 01.04.2020 முதல் சாலை பராமரிப்பு கட்டணம் உயர்வு செய்து வசூல் செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

(925/20/இ2)

**தீர்மானம் எண். 780**

அனுமதிக்கப்பட்டது.

( 19 ) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13, 17 மற்றும் 18 ஆகிய பகுதி வழியாக புதிய பேருந்து நிலையம் மூலகிணற்றிலிருந்து உப்பு நீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வார்டு பகுதியில் Turiff திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் அமைத்து தார் சாலை அமைப்பதால் அவ்வழியாக வரும் உப்புநீர் குழாய் கால்வாயின் நடுப் பகுதியில் வருவதால் புதியதாக பைப் லைன் அமைத்து மேற்கண்ட வார்டு பகுதிக்கு தண்ணீர் வசதி செய்ய உத்தேசமாக ரூ. 200000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(928/20/இ2)

**தீர்மானம் எண். 781**

அனுமதிக்கப்பட்டது.

(20) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் தினசரி மார்கெட் கடைகள் மற்றும் பழைய பேருந்து நிலையக் கடைகள் ஆகியவற்றிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர விளம்பரம் செய்தமைக்கு Bright advertising நிறுவனத்திலிருந்து தொகை ரூ. 17464/– பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகை வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(1288/19/அ2)

**தீர்மானம் எண். 782**

அனுமதிக்கப்பட்டது.

(21) அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3.7.2007–இன்படி நகராட்சியில் குத்தகை விடப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த அசையா சொத்துகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 15315/16/ஆர்3 நாள் 30.11.2016–இல் அறிவுரை வழங்கியபடி பஸ் உரிமையாளர் சங்கத்திற்கு 9 ஆண்டுகள் முடிவடைந்த குத்தகை இனத்தை அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்நகராட்சியில் மறு மதிப்பீடு செய்யப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்பு குழுவின் மூலம் உயர்வு செய்யப்பட்ட வாடகைக்கு ந.க.எண். 4162/2016/அ4 நாள் 04.02.2020 நடைபெற்ற குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. குத்தகைதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் புதுப்பித்தல் கட்டணம், வைப்புத் தொகை செலுத்தி மாத வாடகைக்கு சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளனர். மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | தற்போது வசூலிக்கப்பட்ட வாடகை | அங்காடி மதிப்பீட்டின் மறு நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|
| 1) | தனியார் பேருந்து நேரம் காப்பாளர் அறை 053/231 | ரூ. 1143/– | ரூ. 4600/– |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2576/19/அ2)

**தீர்மானம் எண். 783**

அனுமதிக்கப்பட்டது.

(22) அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3.7.2007–இன்படி நகராட்சியில் குத்தகை விடப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த அசையா சொத்துகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 15315/16/ஆர்3 நாள் 30.11.2016–இல் அறிவுரை வழங்கியபடி நாமக்கல் ரோடு கடை எண். 3–ற்கு 9 ஆண்டுகள்

முடிவடைந்த குத்தகை இனத்தை அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்நகராட்சியில் மறு மதிப்பீடு செய்யப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்பு குழுவின் மூலம் உயர்வு செய்யப்பட்ட வாடகைக்கு ந.க.எண். 4162/2016/அ4 நாள் 04.02.2020 நடைபெற்ற குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. குத்தகைதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் புதுப்பித்தல் கட்டணம், கூடுதல் வைப்புத் தொகை செலுத்தி மாத வாடகைக்கு சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளனர். மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | தற்போது வசூலிக்கப்பட்ட வாடகை | அங்காடி மதிப்பீட்டின்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|
| 1) | நாமக்கல் ரோடு கடை எண். 3 053/128 | ரூ. 728/– | ரூ. 3000/– |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2576/19/அ2)

**தீர்மானம் எண். 784**

அனுமதிக்கப்பட்டது.

(23) அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3.7.2007–இன்படி நகராட்சியில் குத்தகை விடப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த அசையா சொத்துகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 15315/16/ஆர்3 நாள் 30.11.2016–இல் அறிவுரை வழங்கியபடி அரிமா சங்க திருமண மண்டபம் 9 ஆண்டுகள் முடிவடைந்த குத்தகை இனத்தை அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்நகராட்சியில் மறு மதிப்பீடு செய்யப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்பு குழுவின் மூலம் உயர்வு செய்யப்பட்ட வாடகைக்கு ந.க.எண். 4162/2016/அ4 நாள் 04.02.2020 நடைபெற்ற குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. குத்தகைதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதில் புதுப்பித்தல் கட்டணம், கூடுதல் வைப்புத் தொகை செலுத்தி மாத வாடகைக்கு சம்மத கடிதத்தில் தெரிவித்துள்ளனர். மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | தற்போது வசூலிக்கப்பட்ட வாடகை | அங்காடி மதிப்பீட்டின்படி மறு நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|
| 1) | அரிமா சங்க திருமண மண்டபம் 053/272 | ரூ. 20042/– | ரூ. 35000/– |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2576/19/அ2)

**தீர்மானம் எண். 785**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.